TNSDA
02167

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
GOVT. OF MADRAS, MADRAS-
2167

உ

சைவமலரிதழ் 3.

# திருவவிநாசி நான்மணிமாலை.

---

இஃது

தாராபுரச் சிறுவழக்கு மன்றத் தலைவர்

(President, Panchayat Court.)

நா. ஆறுமுகம் பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டுத்

தாராபுரம்

ஸ்ரீ கணேசர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

1931.

# முகவுரை.

சிவநேசச் செல்வர்களே!

ஒருநாள் எளியேன் சில ஏதுக்களால் பல இடங்களி லும் அலைந்து திரிந்து வருந்தி நின்றேன்; அவ்வேளைச் சில திங்கள் முன் என் தமயனுற்ற துயர் நீங்கவும் நலம் ஓங்க வும் அவர் தம் கனவின்கண் ஒரு பெரியார் தோன்றி அருள் புரிந்தபடியே நனவின்கண் உண்மையாக நிகழுமாறு செய்த எல்லாம் வல்ல அபிராசியப்பர் பெருங்கருணைத் திறத்தை நினைந்து அப்பெருமானே என் வருத்தத்தையும் நீக்கியருள் வார் என்னும் துணிவுகொண்டு அவரை வழுத்து முகத்தான் திருவபிராசி நான்மணிமாலை என்னும் இந்நூலைச் சில நாட்க ளில் பாடி முடித்தேன்.

அடியேனால் வெளியிடப்பெறும் "சைவமாலை" நூற் றொகுதியின் முதலாவதிதழாகத் தாராபுரக் கடைவீதி விநாய கர் மாலையையும் இரண்டாவதிதழாகத் தாராபுர வெண்பா வந்தாதியையும் முன்னர் வெளியிட்டேன்; இச் சிறு நூலை மூன்றாவதிதழாகவும் தாராபுர மாணிக்கவாசக சங்க முதல் வெளியீடாகவும் வெளியிடுகின்றேன்.

இந்நூலில் முன்னோர் மொழி பொருளே யன்றி யவர் மொழியும் பொன்னேபோற் போற்றற் கிலக்கியமாகத் தேவாரம், திருவாசகம், திருக்குறள், நாலடியார், சிறுபாணாற் றுப்படை, பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம், திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, சோணசைலமாலை ஆகிய தமிழ் நூல்களினும் சிவாநந்த லகரி என்னும் வடமொழி நூலினும் உள்ள சொல்லையும் பொருளையும் எடுத்தாண் டுள்ளேன்.

இந்நூலில் ஏதேனும் நலன் இருப்பின் அதனை இறைவன் திருவருளின்பாற் சேர்த்துப் பிழைகளை என் அறியாமையின் பால் ஒதுக்கவேண்டுகிறேன்.

சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டுபுரிய அன்பும் ஆற் றலும் தந்தருளுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் போற்று கிறேன்.

தாராபுரம்,<br>
12—10—31

இங்ஙனம்,<br>
நா. ஆறுமுகம்.

2167

# சாத்து கவிகள்.

ஜலகண்டபுரம் சைவத்திருவாளர்,

## ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்

## இயற்றியவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கருப்புக் கொளியூ ருணர்வையிருள்
கஞலி மறைப்பக் கதியுணரா
திருப்புங் கொளினிவ் வுயிர்களந்தோ
வென்னு மென்னு இரங்கியருள்
திருப்புக் கொளியூ ரவிநாசிச்
செல்வர்க் குயர்நான் மணிமாலை
விருப்புக் கொளித யக்கசிவால்
விரித்தான் பெருமை யுரைப்பாமே. (1)

வாரார் புரத்தை மறைத்திடினு
மலர்க்கண் ணூட்ட மையறரு
மேரார் புரத்தை மாற்றிடுமெல்
லியலார் பண்ணை பயில்சோலைத்
தாரா புரத்தை யூராகச்
சார்வோன் றமிழ்நா வலர்பெருமான்
நேரார் புரத்தை நகைந்தெரித்த
நிமலன் றாட்கே நினைவிந்தோன். (2)

வேறு.

ஒருமுகத்தா னுயிருத்தி வினையிரண்டு
முகநாடி யுணர்வு கூடிக்
குருமுகத்தா னறிந்தவற்றை மலமூன்று
முகத்தாவிக் கொள்ளா தேயீ

திருமுகத்தா னிழிவடைய நிமிர்ந்தோங்கு
மைம்முகத்தா னிணைந்நாட் கன்பு
தருமுகத்தா னறுமுகப் பெயருடையா
னெமது நண்பு தழுவியோனே. (3)

## நூன் மதிப்பு.

### நேரிசை வெண்பா.

நான்மணிமா லைக்குவமை நாட்டினவி நாசியப்பர்
நான்மணிமா லைச்சுவைக்கே நாவூறும்—பான்மையினால்
மாணிக்கந் தித்திக்க வாறெலாஞ் சொற்பொருளால்
வாணிக்குந் தக்க வளம். (4)

கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழாசிரியர்,
**(Tamil Pandit, Government College, Kumbakonam.)**
சைவத்திருவாளர்

## அ. கந்தசாமி பிள்ளை அவர்கள் இயற்றியவை.

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கயங்குடை மகளிர் முகங்குழல் செவிகள்
காம்பதம் களம்பல்வா யுந்தி
வயங்குறு கணைக்கால் நடையுடன் பிறவும்
மானுவ பலவுள வொன்றோ
இயங்குறு சிலம்பி னொலிப்பவு முளவால்
இத்தகு மிடம்பிறீ யாவென்
றுயங்கலி லன்பாற் றுளைதரூஉம் வாவி
யுலப்பில சூழ்தல மம்மா. (1)

ஒருகொடி யன்னம் பகர்கையால் வானத்
துறுமல ரரசுட னுவணம்
பொருகொடி யன்னம் படைத்தவல் லரசும்
போற்றுறு சிவகணத் தூய்த்தித்

தருகொடி யக்கம் போல்பவர் தமக்கும்
சரண்தெரி பெருங்கரு ணைப்பேர்
வருகொடி யக்கம் பன்வல மருவி
வாழவி நாசியாம் பதியே. (2)

இன்னநற் றலத்தின் விட்பிதம் பலவால்
எம்பிரான் நம்பியா ரூரர்
முன்னமோர் முதலை பார்ப்பன முதலை
முன்றற மாமறை முதலைப்
பன்னுமா தெய்வத் தமிழ்வளங் கொண்ட
பரிசது பாரினி னீடப்
பின்னுமோர் மீள்வா யிலிங்கமு மழைத்த
பெருமையும் படைப்பது மாதோ. (3)

ஆசிர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அரிய பொருளாம் அவிநாசி
யப்பர் தமது திருவடியில்
முரிவில் "கரும்பே கற்கண்டே
முழுது மினிக்குஞ் செழுங்கனியே"
தெரிய வெளிய கற்பகமே
யென்னச் செழுந்தண் டமிழ்மாலை
உரிய பொருட்சொற் சுவைதுளும்ப
வுவகை துளும்பப் புனைந்தனனால். (4)

சங்கத் தமிழும் பிற்காலச்
சான்றோர் தமிழும் பல்கலையும்
துங்கத் திறத்துப் பலவுரையும்
தோய்ந்த நுண்மா ணுழைபுலத்தோன்

கொங்கிற் றுறை நகர்ச்செல்வன்
குலாவு சைவ சிகாமணியான்
அங்கற் பகநேர் கொடைக்கரத்தான்
ஆறு முகநா வலன்றனே. (5)

படிக்கப் படிக்க மிகவினிக்கும்
பன்பாற் பலவா செழுமுளத்தை
நடிக்கப் பிடித்த திருவடிக்கே
நாட்டுந் திறத்தால் இளகாத
பிடிக்கப் பிடித்த கன்மனமும்
குழைக்கும் பரிசாற் பேசிடலிப்
படிக்கிப் படித்த பெரும்பயன்றந்
தவரார் பிறர்பா வலரீரே. (6)

---


## மதிப்புரை.

### சித்தாந்தம்.

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு.

(மலர் 4. இதழ் 11.)

திரு அவிநாசி நான்மணி மாலை:— ஆசிரியர். திரு. தா. நா. ஆறுமுகம் பிள்ளை, பஞ்சாயத்துக்கோர்ட்டுத் தலைவர், தாராபுரம். இம்மாலை நாற்பது பாக்களான் யாக்கப்பெற்றது. பாடல்கள் சொல்நயமும், பொருட் செறிவும், நன்னடையும் உடையன. தேவாரம், திருவாசகம், திருக்குறள் முதலிய பெரு நூல்களின் வாக்குக்களை இடையிடையே உள்ளவாறே எடுத்து இவ்வாசிரியர் தக்கவாறு பிரயோகம் செய்துள்ளது பெருமகிழ்ச்சியை விளைவிக்கிறது. வேண்டுவோர் இவ்வாசிரியருக்கு எழுதுக.



முதலைவாய்ப்பிள்ளை யழைத்தது

2167

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவவிநாசி நான்மணிமாலை.

## கணேசர் வணக்கம்.

குறள் வெண்பா.

நல்ல வவிநாசி நான்மணிமா லைப்பனுவல்
சொல்லக் கணேசன் றுணை.

## நூல்.

நேரிசை வெண்பா.

பூமலியுஞ் சோலை புனன்மலியுந் தூயகுளம்
பாமலியுஞ் சீர்த்தி பரவியவூர்—தேமலியுங்
கொன்றை முடிப்பெருமான் கூடு மவிநாசி
சென்று பணிந்தடைவோஞ் சீர். 1

கட்டளைக்கலித்துறை.

சீர்கொண்ட கொங்கி னவிநாசி
நாதன் றிருவடிக்கண்
நார்கொண்ட வுள்ளந் தனைக்கொண்ட
மெய்யர் நலமருவும்
வார்கொண்ட கொங்கை மனையின்ப
மக்கண் மருவுபெரும்
பேர்கொண்ட கல்வி புகழ்கொண்ட
செல்வம் பெறுகுவரே. (2)

ஆசிரியச்சந்தவிருத்தம்.

பெறுவா ரறுகணி முடிமே லொளிர்தரு
பிறையே யணிசிவ னருடானே
உறுவார் பரகல மிறவா வுயர்வின
ரொருபோ தினும்வினை மருவாரே
சிறுவா னவர்தமை நினையார் பவமிலர்
சிவமா நெறியின ரவர்மாலே
அறுவார் திருவவி நாசியி லுறை
பரனுர் பணிபுரி யடியாரே. (3)

நேரிசையாசிரியப்பா.

அடியவ ருள்ளத் தடமலர் மலரே
கடிமல ரிடையே கசியுமின் றேனே
தேனின் சுவையே திகழ்நான் மறையும்
வானு மண்ணும் வழுத்திடுங் காண்டற்
கரிய பொருளே யறிவி னுருவே
அன்பினி லூறு மின்பமா ரமுதே
சாற்றும் பல்வகைச் சமயத் தவரும்
போற்ற வல்லவர் பொருளா னேனே
மூவா முதலே முடிவில்லான் பொருளே
தேவா சிவமே திருவவி நாசி
அப்பா நின்னடி பாடியேன்
எப்போ துந்தொழ வினிதருள் வாயே. (4)

நேரிசை வெண்பா.

அருள்வாய்த்த பேரன்பர்க் கல்லாமற் பாச
இருள்வாய்த்த பேர்க்கிங் கெளிதோ—பொருள்வாய்த்த
வேதங்க ளேத்தும் விமலனவி நாசியப்பன்
பாதங்க ளேத்தும் பரிசு. (5)

### கட்டளைக்கலித்துறை.

ஏத்தும் பரிசென்று மெங்கும்
பெறலாகு மேழைநெஞ்சே
பூத்தெங்குந் தூய மணம்வீசு
கின்ற புதுமலரே
சாத்தும் பணிசெய்து பாட்டிற்
புகழ்ந்தேத்திச் சாருமன்பாற்
கூத்தன் றிருவவி நாசி
யிறைபாதங் கும்பிடவே. (6)

### ஆசிரிய விருத்தம்.

கும்பிடு வார்க்கு நெஞ்சங்
குழைபவர் தமக்குந் தன்னை
நம்பிடு வார்க்கு மன்பா
னடம்புரி பவர்க்கு மென்றும்
எம்பெரு மானென் பார்க்கு
மெவ்வரங் களுந்தந் தாள்வான்
உம்பரும் வந்து போற்று
முயாவி நாசி நாதன். (7)

### நேரிசையாசிரியப்பா.

நாத திருவவி நாசியின் மேய
போத நிறைவே புண்ணிய மூர்த்தி
அன்பின் பெருக்கே யருளி னுருவே
துன்பந் துடைப்போ யின்பக் கருவோய்
எல்லா முணர்ந்தோ யெங்கு நிறைந்தோய்
எல்லாம் வல்லோ யெல்லா மானோய்
அலைசேர் குளத்திற் பலநாண் முன்னர்

முதலை விழுங்கிய மதலை தன்னைச்
சீரூர் தருந்திரு வாரூர் முனிவரன்
சொல்லுக் குவந்துல கெல்லாம் வியப்பக்
கரைதனி லேயக் கராம்வந் துமிழ
விரைவினி லருளிய வித்தக விதுகேள்
உலப்பில் காமமா மொருபெருங் குளம்விழுந்
தலக்க ணுறுங்கா லந்தோ பிணியெனு
முதலை விழுங்க முயன்ற தம்ம
நெஞ்சம் பதைத்தே னஞ்சி யலறினேன்
உயிரெலாம் பெற்ற வுயர்பெருங் கருணை
நாயகி தலைவ நவில்பரம் பொருளே
பேயனே னுவா பெருங்கராம் வாய்க்குத்
தப்பிப் பிழைக்கவுந் தளர்வில்பே ரின்பக்
கரைசேர் தரவுநின் கழற்புணை
அமைசே தந்திங் காளுதல் கடனே. (8)

நேரிசை வெண்பா.

கடனாகு மெய்யர் கருதுமவி நாசிப்
படநாகம் பூண்ட பரனைத்—திடமாக
வஞ்ச வினைமுழுது மாய்ந்து பறந்தோடத்
தஞ்ச மெனவணங்கு றான். (9)

கட்டளைக்கலித்துறை.

தானந்த மில்லான் றனையடைந்
தாரைச் சகம்பணிய
ஆலந்த வெள்ளத் தழுத்தவித்
தானவ னூரெனிலோ

கானந் தனிலாடும் பித்தன்
பலிதேர்வன் காலமெல்லாம்
போனந் தவாதவ தேத்து
மவிநாசி முக்கண்ணனே. (10)

## ஆசிரிய விருத்தம்.

முக்கட் கரும்பே கற்கண்டே
முழுது மினிக்குஞ் செழுங்கனியே
செக்கச் செவந்த திருமேனித்
தேவே பச்சைப் பசுங்கொடியோர்
பக்கத் தணையுங் கற்பகமே
பத்தி வலையிற் படும்பொருளே
நக்கப் புரமூன் றெரித்தவவி
நாசி யிறைவே குருமணியே. (11)

## நேரிசையாசிரியப்பா.

மணியே மணியின் வளர்பே ரொளியே
பணியே விளங்கும் பணியா வணிவோய்
வாழையுங் கமுகும் வானுயர் தெங்குங்
கூழைப் பலவுங் கோடுயர் மாவுஞ்
செறிந்தே யெங்கு நிறைந்த பொழிலின்
மன்னுங் குயிலும் வன்னக் கிளியும்
இன்னிசை யெழுப்ப வெழின்மயி னடிப்ப
அளியின மொல்லாங் களிமணங் கொள்ளுஞ்
சீரவி நாசி யூருறை சிவனே
தந்தையுந் தாயுந் குரு மாயினை
எந்த ஞான்றினு மெளியே னுனையே
நீள நினைந்து நினைந்து கைதொழு
தாளும் பட்டே னுண்டவ
அடியவ் ரன்பெனக் கருளுதி யினிதே. (12)

நேரிசை வெண்பா.

இனிதான கங்கை யிலங்குசடை யம்மான்
பனிசேர் மலைதந்த பாவை—தனதாகங்
கொண்டா னவிநாசிக் கோமான் றனைச்சென்று
கண்டார் தவமுடையார் காண். (13)

கட்டளைக்கலித்துறை.

கான வரியா னவிநாசி
மேவுங் கடவுடனைப்
பேண லினியன் மறியார்
கரத்தன் பிறங்குமன்ற
வான னுயரால்ன் கீழொரு
நால்வர் மனமடக்கம்
பூண வருண்ஞானஞ் சொல்லாது
சொன்னனைப் போற்றுதுமே. (14)

ஆசிரிய விருத்தம்.

போற்றியு மவிநா சிப்பதி யிறைக்குப்
புனிதமூங் திரப்புனன் முடிமேல்
ஊற்றியு மாலை சூட்டியு மின்னு
முறுவன வாயபல் பணிகள்
ஆற்றியு முள்ள கைந்நுனைந் திருகி
யன்பினுற் றமிழ்மறை யெடுத்துச்
சாற்றியு மின்பக் கடல்படிந் திட்ட
தகைமையர் தாள்வணங் குதுமே. (15)

நேரிசையாசிரியப்பா.

வணங்கு மயனு மாலுந் தம்முட்
பிணங்கி நெடுநாட் பெரிது முயன்று

தேடியுங் காணாச் சிவனே போற்றி
ஆடர வசைத்த வையா போற்றி
உயிர்க்குயி ராய வுறவே போற்றி
செயிர்க்குண மாற்றுந் தேவே போற்றி
நீறுகந் தணியு நிமலா போற்றி
ஏறுகந் தேறு மெம்மான் போற்றி
ஒழுக்க நெறியி னுய்ப்பாய் போற்றி
மழுப்படை யேந்திய மன்னா போற்றி
பற்றற் றவர்தம் பற்றே போற்றி
கற்றைச் சடைமுடிக் கடவுள் போற்றி
வேலவ னைத்தரு மேலோய் போற்றி
தோலுடை யுடுக்குந் தூயோய் போற்றி
அம்பலத் தாடு மழகே போற்றி
நம்பா தனிப்பெரு நாதா போற்றி
புக்கொளி யூரிற் புனிதா போற்றி
நெக்குள நினைவார் நிதியே போற்றி
என்றவி நாசியி னின்பொற்
குன்றின் சீர்த்தி கூறுது நாமே. (16)

நேரிசை வெண்பா.

நாமே யவிநாசி நாத னடிபணியப்
பூமேலே யாற்றியவப் புண்ணியமென் — னாமே
இனியார்க்கு மஞ்சாத வேற்றமா னன்பின்
இனியார்க்கு நண்பா மியல்பு. (17)

கட்டளைக்கலித்துறை.

இயலாருஞ் சாயன் மயில்போலு
மாத ரிடந்தினமு
மயலாரு நெஞ்சந் தனைத்தூது
விட்டிந்த மண்மிசையே

அயலாரூ மேசத் தனிவாடு
மென்றன்னை யாளுவையோ
வயலாருஞ் செல்வ வவிநாசி
மேய மணிகண்டனே. (18)

ஆசிரியச்சந்தவிருத்தம்.

மணிகண்ட னேயவி நாசியி லுயர
வளரன்பி னொலொரு பாலனுன் சேவடி
பணிகின்ற போதவ னுவிகொள் வானுயர்
படைகொண்டு சீறியு மேவரு காலனை
அணிகொண்ட கால்விர லாலுதை யாவுயி
ரதுகொண்ட வீரசி காமணி யேயுனை
எணிநின்று னைமமு மோதிட வேசம
னெனையன்று றுவகை நீயருள் வாயரோ. (19)

நேரிசையாசிரியப்பா.

வாய்ந்தபல் பிறப்பினு மக்கட் பிறப்பே
ஆய்ந்துணர்ந் தோரெலா மரிதெனப் புகன்றார்
ஒப்பில தான விப்பிறப் பெடுத்துங்
கொங்கெழு தலங்களிற் பொங்குஞ் சீர்கொளுந்
திருவவி நாசி யொருமுழு முதலை
வாழ்த்திலர் வணங்கிலர் மனமதி னினைந்திலர்
பாழ்த்த பொருளும் பாவையர் முயக்கும்
எண்ணில்பஃ றுன்ப விடர்கட் கிடமா
மண்ணின் வாழ்வு மதித்தனர் நிலையென
இன்னவர் தாமே யிழிவினு மிழிவாப்
பன்னும் பிறப்புப் பலபல வெடுத்தே
அயர்வு மிகுதருந் துயர்தனின் மூழ்கி
உய்யு நெறியிங் குணரா ராகி

ஐயகோ நரகி னழுந்துவர்
தெய்வ நாயகன் றிருவரு ளிலரே. (20)

### நேரிசையாசிரியப்பா

இலராக வாடு மெளியாருக் கீயார்
மலைபோலுஞ் செல்வத்தில் வாழ்ந்தென்—னிலையான
நற்றவர்க ளேத்துமவி நாசியண்ணலைப்பணியார்
பெற்றகல்வி யாற்பயனென் பேசு. (21)

### கட்டளைக்கலித்துறை

பேசுவ ரெங்க ளவிநாசி
நாதன் பெருப்புகழே
பூசுவர் தூய திருநீறு
மெய்யிற் புகன்மலத்தை
வீசுவர் ஞான மெனுங்கூர்மை
வாள்கொண்டு வீழ்தரவே
ஏசுவர் புல்லர் தமையீச
னன்பர்க் கினியவரே. (22)

### ஆசிரிய விருத்தம்

இனியவ னேயவி நாசியி னொளியே
இமையவர் காணரி தாம்வெறு வெளியே
முனிவரர் நாடொறு மேபணி திருவே
முழுதுல காகிய வோர்பெரு முருவே
பனிமலை மாதொரு பாகம துடையாய்
பரவுறு சீர்நெடு மாலுயர் விடையாய்
தனியவ னுமெனை யாளந னிதியே
தயைபுரி யாவிடி லேயெவர் கதியே. (23)

நேரிசையாசிரியப்பா

கதியே தரும்பசு பதியே நாளும்
எவ்வுயிர் கட்கு மெவ்வகை யானும்
இன்பம் புரிவார் துன்பந் துடைப்பார்
அறத்தி னுயர்ந்த திறத்தினர் வாழும்
அவிநா சிப்பதிச் சிவமே நின்னருள்
முழுதும் பெற்றும் முதிரன் புற்றும்
அழுதழு கையநின் னருளிலே மென்றூர்
அன்பொரு சிறிது மடைந்திலே மென்றூர்
தன்பெரும் சிறப்புந் தானுண ராதாய்
உண்மை யறிவின்ப வுருவே யெளியேன்
மண்மிசைச் சிறிதும் வழுத்துநின் னருளைப்
பெற்றிலே னன்பு முற்றிலே னென்பேன்
உள்ளத் துள்ளே யோங்கார மான
வெள்ளச் சடையெம் வித்தக வறியார்க்கொன்
றீவதே யீகை யெனுமொழி நிலைப்பப்
பாவ நாச பார்த்திங்
கெற்கரு டரவே பொற்புடைத் தாமே. (24)

நேரிசை வெண்பா

பொற்புடைய வெள்ளிப் பொருப்புடையான் மூவிலைவேல்
நற்படைய னல்லவவி நாசியண்ணல்—லெற்புடையன்
பாலா முளமுடையார் பாடும் பணியுடையார்
மேலா நெறியுடையார் மெய். (25)

கட்டளைக்கலித்துறை.

மெய்யாக வாரூர் முனிவன்
களிக்காக வீங்கிருவில்
ஐயா பரவை யிடந்தூது
சென்ற வடிமலர்கள்.

பொய்யான நெஞ்ச முடையேன்
றலையிற் பொருந்திடுமோ
செய்யாருந் தெய்வ வவிநாசி
மேய செழுஞ்சுடரே. (26)

ஆசிரிய விருத்தம்.

செழுஞ்சுடரே யவிநாசித் திருவளருங் கோவே
சிறியேன்ற ஞவியொடு தேகமுமெய் பொருளும்
வழங்கருளா னாட்கொண்டு வாழ்வளிந்த பொழுதே
வல்லவினை கொண்டிலையோ வாட்டமெனக் கிலையால்
எழுங்களிசெய் நலம்பலவு மினிதருளு வாயோ
விடருழக்கச் செய்வாயோ வேதுமறி கிலனால்
தொழும்பணிசெய் வதுவல்லாற் சோதிமணி மன்றிற்
றூயவனே கேட்பதற்கு நாயகனு னலவே. (27)

நேரிசையாசிரியப்பா.

அவிநா வலவிதென் றருமறை களுமன்மைச்
சொலினெடுத் துரைசெயத் துரியமுங் கடந்தவ
நட்டநீ ரொட்டிவ் வெட்டுணை யேனும்
உதவியை நாடா துற்றுழி யுதவி
இதமிகப் புரியு மிசைநன் பரின்விந்
நிட்டநா ளெல்லா மெல்லநா ளினுநீர்
விட்டில லேனும் விடாய்கொடு தளிந்துக்
கோடையின் மிகவும் வாடிய வவர்க்குக்
கண்கவர் வனப்பும் பண்கனி சொல்லும்
இளமையும் வாய்ந்த வளமிகு பெண்கள்
கனிவா யெயிற்றி னினிதா நீரிற்
சிறந்த சுவையே நிறைந்த நீர்கொள்

நுங்கு சாரும்பனை யெங்கும் பொலிநகர்
மணிநெடும் தேரூ ரணிநெடுந் தெருவார்
திருவவி நாசிக் கருணையங் கடவுள்
புகலியின் வந்து புனிதவாய் மலர்ந்து
சகமுழு துய்யச் சைவந் தழைப்ப
அமிழ்தினு மினிய தமிழ்மொழி யோங்க
அழுதகன் மகவுங் கன்றமு தூட்டிய
எழில்பொற் கின்னரங் கழுவுநீ ரேனும்
எளியனேற் களிப்ப வளிமுயல் கோதைநற்
றுடியிடைச் செவ்வாய்ப் பிடிநடை மலர்க்கரச்
சுடர்நுத லுமைக்குச் சொல்லுதி யைய
அதுபெற் றேனே லம்ம
வேறித னினுமுயர் பேறினி யேதே (28)

## நேரிசை வெண்பா.

ஏது மறிவில்லா னேனு மெழுத்தஞ்சும்
ஓது நெறியுடையா ருள்ளத்தே—பேதம்
அறவிருப்பான் மாதோ டவிநாசி நாதன்
உறவிருப்பான் காப்பா னுணர். • (29)

## கட்டளைக்கலித்துறை.

உணர்ந்தவ ரேத்துந் தலையன்ப
னைய வொருவன்சிலை
புணர்ந்தவன் மேருவை யுயர்திண்ண
னன்று புலால்கமழக்
கொணர்ந்திட வுண்ட வவிநாசி
நாத குணமுழுதங்
கணந்தவென் பாட லெஃபுங்கொள்ளு
வாயின்று தானுகந்தே. (30)

ஆசிரிய விருத்தம்.

உகந்துனது பதமலரை நினைந்துநினைந்
துருகுகின்ற வொருபே றன்பென்
அகந்தனிலே பொருந்துறவே வரந்தருவை
யேலடியே னம்மா நீடுஞ்
சகந்தனிலே பெப்பிறவி யெடுத்தாலு
மிழிவென்று சாற்ற மாட்டேன்
சுகந்தரும்பே ரவிநாசி யிறைவசடைக்
காடுடைய சுடர்ப்பொற் குன்றே (31)

நேரிசையாசிரியப்பா.

குன்றினிற் குகையிற் கொடுங்கா னகத்திற்
சென்றுண வின்றித் தீயிற் புனலில்
நின்றுடல் வாட நெடுந்தவம் புரிவீர்
என்றடை வீர்கா ணெண்ணிய பயனை
இன்றவி நாசி யெழினகர் சென்மின்
ஒன்றிய வுள்ள முடையி ராகி
மன்ற வானை மனத்திடை நினைமின்
நன்றுள பாட்டா னவிற் றுதிமின்
துன்றுபன் மலர்க டூஉய்மெய் வணங்குமின்
மன்றலந் தளவோன் மலரிடை வதிவோன்
வென்றியீந் திரன்பிற விண்ணவ ரிவர்பாற்
சென்றடை யாத திருவை
என்றும் பெறுவ தெளிதெனு மறையே. (32)

நேரிசை வெண்பா.

மறைவல் லவர்பலரும் வாழுமவி நாசி
இறைவ னுயிர்க ளிடஞ்செய்—நிறையருளுக்
கெல்லையில்லை யென்னுமுண்மை யெண்ணுங்கா லாசைக்கோர்
எல்லையில்லை யம்மா வெனக்கு. (33)

கட்டளைக்கலித்துறை.

எனக்கினி யார்கை விரலே
மடக்கி யெணற்கலதிங்
குனற்கெவ ரேனு முளர்கொலிவ்
வேழை யுணர்விலியேன்
தனக்கினி யானு மினியனல்
லேனென்றுந் தானினியன்
கனக்குழை பூண்ட வவிநாசி
நாதன் கறைக்கண்டனே. (34)

ஆசிரியச்சந்தவிருத்தம்.

கறைமேவு நெஞ்சின ரோடுறவே
கலவாதி ருந்தறி யேனிதமே
குறைபாத வெஞ்சின மேகொலையே
கொடிதான வஞ்சக மேயுடையேன்
இறையேனு முன்றனை யேநினையே
னெனினேனை வந்தினி யாளுவையோ
அறையார்சி லம்பணி சேவடியாய்
யவிநாசி யங்கணை னேசிவனே. (35)

நேரிசையாசிரியப்பா.

சிவனே பிச்சைத் தேவே திருவார்
அவிநா சியிலுறை யப்பா மோக
வனத்தே திரிந்து வனப்பி னுயர்ந்த
மங்கையர் தங்கள் கொங்கைக் குவட்டின்
அடியும் பார்த்து வவாக்கிளை யின்விரைந்
தோடியுந் தாவியு முறுதுயர்ப் படுமென்
வன்மனக் குரங்கை நின்மல ரடிக்கே

அன்பெனும் கயிற்றால் வன்பூறப் பிணித்தே
என்றும் கைவிட லின்றி
உன்றனக் கேயிங் குரியதாக் கொள்ளே. (36)

நேரிசை வெண்பா.

கொள்ளுந் திருவருளாற் கோமா னவிநாசி
வள்ளன் முறைமுழு வகைப்பசுவுக்—குள்ளகட்டு
முற்றுமவிழ்த் தேயின்ப முத்திவனா மேயவிடுஞ்
சிற்றிடைச்சி தன்கணவன் றேர். (37)

கட்டளைக்கலித்துறை.

தேர்தரு வீர்நம் மவிநாசி
நாதன் றினமணைத்து
வார்தரு கொங்கை யமுதூட்டு
தாயினு மாண்புறவே
சோர்தரு முள்ளந் தனைத்தேற்றி
யின்பஞ் சொரிதருமால்
ஆர்தரு வார்நம் மிறையிவன்
போல வளிசுரந்தே. (38)

ஆசிரியவிருத்தம்

அளியானே யெளியவருக் கமரர்க் கெல்லா
மரியானே யவிநாசிக் கனியா யோங்குந்
தளியானே யிருந்தாலு நின்றிட் டாலுந்
தளர்துயில்கொண் டாலுநடை தான்கொண் டாலுங்
களியார வினியவுண வருந்தினாலுங்
கனிமொழியார் தமையணைந்து கலந்திட்டாலும்
எளியேன துளமுன்ற னிணைப்பூம் பாத
மெப்போது மறவாத வியல்பீ வாயே. (39)

நேரிசையாசிரியப்பா.

வாய்ந்த சரியையர் வழுத்துங் கிரியையர்
தோய்ந்த யோகத் தொடர்பினர் ஞான
மருவினர் வாழுந் திருவவி நாசியில்
உடலின் மலமுந் தடைசெய் யுயிரின்
மலமுங் கழுவி நலமுந் தருஞ்சிவ
கங்கைப் புனலே பொங்கித் ததும்ப
நேசத் தவர்கள் காசித் தீர்த்தம்
என்றே போற்ற வேற்ற மிகுங்கிண
றென்றோர் பாலுற்று முயர்பெருங் கோயிலின்
இறையவ கல்வி முறைபெறக் கற்கு
மாணவ ருளத்தே மகிழ்வினை யூட்டியும்
வீணினுட் போக்கி வித்தைகல் லாத
இளஞ்சிறார் தங்க ளுளந்துளங் குறவே
பிரம்படி தந்து நிரம்புபே ரன்பின்
வேற்றுமை யில்லா வாற்றலா சான்போல்
அறவினை யாளர்க் கறக்கரு ணையையு
மறவினை யவர்க்கு மறக்கரு ணையையும்
வழங்கி யுயர்பதம் வழங்கு முன்னைப்
பழம்பொரு ளேயெம் பற்றறுப் போயே
வெள்ளி மலையின் விளங்குவோ யாகலின்
கள்ளங் கலந்தவென் னுள்ளங் கல்லே
ஆயினு மென்னை யதனினு
மன்னுதல் வேண்டுநின் பொன்னடிப் பூவே. (40)

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
GOVT. OF M.D. S. ...
2167